



நாவெளி NAAVELI

பிரதேச செயலக மாதாந்த இலத்திரனியல் சஞ்சிகை

Divisional Monthly e-Magazine ප්‍රාදේශීය මාසික ඉ-සංරාව





மலர் : 02 ✦ இதழ் : 18 ✦ 2024ஆம் வருடம் மாசி மாதம் இருபத்தைந்தாம் திகதி

# 76வது சுதந்திர தினவிழா





-நிருபர்.ஏ.எல்.எம்.சினாஸ்- இலங்கையின் 76 ஆவது சுதந்திர தின நிகழ்வானது கடந்த 2024.02.04 ஆம் திகதி நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி அவர்களின் தலைமையில் பிரதேச செயலக முன்றலில் இடம்பெற்றது. இப்பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளரினால் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து தேசியக்கீதம் இசைக்கப்பட்டதுடன், இந்நாட்டுக்காக உயிர்நீத்த தியாகிகளினை நினைவுகூரும் வகையிலான மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், சுதந்திர தினம் தொடர்பான முக்கிய உரையொன்று பிரதேச செயலாளரினால் நிகழ்த்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து சுதந்திர தினத்தினையொட்டிய மரநடுகை நிகழ்வுக்கமைய பிரதேச செயலாளரினால் மரநடுகையும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தைப்பொங்கல் விழா





-நிருபர்.கி.யோகேஸ்வரன்- நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான தைப்பொங்கல் விழாவானது, பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி அவர்களின் தலைமையில் கடந்த 2024.01.23 ஆம் திகதி பிரதேச செயலக முன்றலில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.வே.ஜெகதீசன் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. விவசாயத்துக்கு உதவும் சூரியனுக்கு, நன்றி செலுத்தும் முகமாக இப்பண்டிகை கொண்டாடப்படுகின்றது. நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களின் வருகையுடனும் அவர்களது உயரிய பங்களிப்புடனும் பல்வேறு வகையான பொங்கல் இடம்பெற்றமை இந்நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

# பால் உற்பத்தியும், நாவெளியும்





-நிருபர்.ஆர்.சுவர்க்கா- பால் உற்பத்தியின் மூலம் பண்ணையாளர்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கான முயற்சி நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பண்ணையாளர்களுடனான கலந்துரையாடல் 2024.02.22 ஆம் திகதி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி அவர்களின் தலைமையில் நாவிதன் வெளி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலின் போது, மில்கோ நிறுவனத்தின் கிழக்கு மாகாண முகாமையாளர் திரு.ஆர்.ரமணன் அவர்களினால் மில்கோ நிறுவன செயற்பாடு மற்றும் பண்ணையாளர்களுக்கான விழிப்புணர்வு வழங்கப்பட்டது. இதன்போது மில்கோ நிறுவன உத்தியோகத்தர்களும், பண்ணையாளர்களும் கலந்து தொடர் 07ஆம் பக்கம் ....

# உரித்து ஒரு தேசிய வேலைத்திட்டம்



-நிருபர்.ஆர்.சுவர்க்கா- **காணிக்கான ஆவணங்கள் இன்றி பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு நாட்டின் ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவுக்கு அமைய செயற்படுத்தப்படும் சிக்கலில்லா நிலத்தின் முழுமையான உரிமைத்தை அனைவருக்கும் உரித்தாக்கும் உன்னத நோக்கில், இலவச காணி அளிப்புப் பத்திரங்கள் ஜனாதிபதி அவர்களால் வழங்கி வைக்கப்பட்டன.**

தொடர் 07ஆம் பக்கம் ....

# இ-வரவேற்பு கரும பீடம் அங்குரார்ப்பணம்



-நிருபர்.அ.சனோஜன்- **பொதுமக்களுக்கான சேவையை மேம்படுத்தும் முகமாக நாவிதன் வெளி பிரதேச செயலாளரின் எண்ணக்கருவில் உருவான இலத்திரனியல் வரவேற்பு கரும பீடமானது, 2024.02.14 ஆம் திகதி காலை 8.45 மணிக்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

தொடர் 07ஆம் பக்கம் ....

## ஆசிரியரிடமிருந்து.....

“நாவெளி மலர் - 02 இல் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. நான்கு திசைகளிலும் பரந்துபட்டுக் காணப்படுகின்ற செய்திகளை ஒன்றுதிரட்டித் தருவதற்கு நாவெளி பெரும் முயற்சி எடுத்து வருகின்றது. அதுமாத்திரமின்றி நாவிதன் வெளியின் வெளிப்படைச் செய்திகளையும், வாசகர்களின் விருப்பத்தினையும் நாவெளி கொண்டுள்ளது என்பதனைக் கூறுவதில் நாவெளி பெருமை கொள்கிறது. நாவெளி சஞ்சிகையினை மேலும் மெருகேற்றிக் கொள்வதற்கு நாவிதன்வெளி பிரதேச செயலகத்திலுள்ள உத்தியோகத்தர்களை உள்ளடக்கி e- magazine குழு ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆம். நாவெளி பற்றிப் பார்க்கும் சந்தர்ப்பத்தில் பரந்து விரிந்த இப் பிரபஞ்சம் எம் கண்முன்னே வரத்தான் செய்கிறது. இப்பிரபஞ்சம் அறிவியல் உலகில் எவ்வாறு கருதப்பட்டு வருகிறது என்பது நாம் அறிந்த உண்மை. சாதாரண மனித ஆற்றல்களையும் நம் புலன்களுக்குத் தென்படக் கூடிய இயற்கை ஆற்றல்களையும், ஒலி, ஒளி, கதிரியக்கம் போன்ற அறிவியல் ஆற்றல்களையும், மீறிய பலவித ஆற்றல்கள் நிறைந்ததே இப்பிரபஞ்சம். இன்னும் சொல்லப்போனால் பிரபஞ்சம் முற்றிலுமே இத்தகைய ஆற்றல்கள் நிறைந்ததுதான்.

ஆற்றல்கள் இன்றி இப்பிரபஞ்சத்தில் எந்த ஒரு பொருளும், உயிரும், துகளும், அணுவும், மன இயக்கங்களும் இல்லை. சாதாரண மனித ஆற்றல்களுக்கும், இயற்கை ஆற்றல்களுக்கும், அறிவியல் ஆற்றல்களுக்கும் அப்பாற்பட்ட அத்தகைய ஆற்றலே “அமானுஷ்ய ஆற்றல்” (Occult Power) எனப்படுகின்றது.

உங்களுக்குள்ளும் “அமானுஷ்யஆற்றல்” இருக்கலாம். சாதாரணமாக, இன்று நடக்கும் ஒரு சம்பவத்தை “எனக்கு அன்றே தெரியும், இப்படி நடக்குமென” என எத்தனை பேர் சொல்லி இருப்பீர்கள். அவ்வாறு சொல்லும் போது இது ஒரு “அமானுஷ்யசக்தியா”என உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆம், இதுவும் உங்களுக்குள் இருக்கின்ற அமானுஷ்ய ஆற்றல்தான். சக்திதான்.

இதனை உணர்ந்து பாருங்கள்.சற்று வாழ்ந்து பாருங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே !

என்றும் அன்புடன்,
--ஆசிரியர். --

## வாழ்க்கைத் தத்துவங்கள்

சிறந்தவனாய் இரு
சிறந்ததை வைத்து இரு
சிறந்ததை மட்டும் செய்.

ஓடாத நதியும்
தேடாத மனமும்
தெளிவு கொள்ளாது.

போகும் போதே என்னை
ரசித்துக் கொண்டே போ
திரும்பி வரமாட்டேன் உனக்காக.

எதுவும் சில காலம் தான்
எதிர்பார்ப்பை குறைத்துக் கொள்
ஏமாற்றம் பெரிதாக இருக்காது.

சிந்தனை செய்
கோபம் கொள்ளாதே
வாழ்வது ஒரே ஒரு வாழ்க்கை.

நேசிக்க கற்றுக் கொள்
உலகிலேயே மிக மிகச் சிறந்தது
நம்மை நாம் நேசிப்பதே.

இன்பத்திலும் சரி துன்பத்திலும் சரி
மனம் விட்டு பேச துணை
இல்லாத போதுதான் தெரியும்
உண்மை அன்பின் பெருமை

மௌனத்தில் வார்த்தைகளையும்
கோபத்தில் நிதானத்தையும்
உணர்ந்து கொள்வதுதான்
உண்மையான உறவு
புரிதல் இருந்தால் பிரிதல் இல்லை.

*******

படித்ததில் பிடித்தது
என். சிவம்
சமுர்த்தி தலைமை முகாமையாளர்

## வாழ்க்கைத் தத்துவங்கள்

அழிவைத் தருவது (ஆணவம்)
ஆபத்தைத் தருவது (கோபம்)
இருக்க வேண்டியது (பணிவு)
இருக்க கூடாதது (பொறாமை)
உயர்வுக்கு வழி (உழைப்பு)
கண்கண்ட தெய்வம் (பெற்றோர்)
செய்ய வேண்டியது (உதவி)
செய்யக் கூடாதது (துரோகம்)
நம்பக்கூடாதது (வதந்தி)
நழுவ விடக்கூடாதது (வாய்ப்பு)
நம்முடன் வருவது (புண்ணியம்)
பிரியக் கூடாதது (நட்பு)
மறக்க கூடாதது (நன்றி)
மிக மிக நல்லநாள் (இன்று)
மிகப்பெரிய தேவை (அன்பு)
மிகக்கொடிய நோய் (பேராசை)
மிகவும் சுலபமானது
(குற்றம் காணல்)
மிகப் பெரிய வெகுமதி (மன்னிப்பு)

******

- ம. சதுஷ்ரிகா -

## இந்து சமய வழிபாட்டில் உளவியல்

வை.ஜசோப்பிரியன், DO

“மனம் ஒரு குரங்கு” எனும் அடைமொழி சுட்டுவது, குரங்கு எவ்விதம் ஒரு இடத்தில் தரித்து இருக்காது, ஒரு பொருளை மட்டும் விரும்பி உண்ணாது மரத்துக்கு மரம், இடத்துக்கு இடம் தாவி திரியுமோ அதேபோல் மனித மனங்களும் ஒரு நிலைப்பட்டு இருக்காமல், அது வாழ்க்கை என்ற வட்டத்தில் இன்ப துன்பங்களுக்கு வசப்பட்டு கோபம், விரக்தி, சந்தோசம், எரிச்சல், பொறாமை, அன்பு, பாசம், கவலை போன்ற எல்லாவற்றையும் தனக்குள்ளே வைத்துக் கொண்டு குரங்கைப் போல தாவித்திரிகின்றன. எனவே, இவற்றை ஒரு நிலைப்படுத்தி மனதுக்கு அமைதியைக் கொடுப்பதில் இந்த ஆலய வழிபாடு ஒரு முக்கிய மனவமைதிப் பொருளாக இருக்கின்றது என்பதே உளவியலாளர்களின் கருத்து.

அடுத்த இதழில் தொடரும்...

## அபிவிருத்திப் பாதையில்...

ரி.சசிதேவி,
அபிவிருத்தி உத்தியோகத்தர்

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ஆர்.ராகுலநாயகி அம்மணி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் பிரதேச செயலகத்திற்கான பெயர்ப் பலகையானது பொருத்தப்பட்டது. சேவைநாடிவரும் பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டும் இப்பிரதேச செயலகத்தினை அடையாளம் காணும் பொருட்டும் இப்பெயர்ப்பலகையானது புத்தாக்க வடிவத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. 2024.01.18 ஆந் திகதி நடைபெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் திரு. சிந்தக அபேவிக்ரம அவர்கள் கலந்து கொண்டதுடன், பெயர்ப்பலகையும் திறந்து வைக்கப்பட்டது.





நாவிதன்வெளி பிரதேச செயலக பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி அம்மணி அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் பிரதேச செயலக முன் வளாகத்தினுள் பயனற்று தரிசு நிலமாகக் கிடந்த முன் மற்றும் பின் பகுதியில் loader இயந்திரம் கொண்டு திருத்த வேலைகள் இடம் பெற்று மாமரக் கன்றுகள் மற்றும் தேசிமரக் கன்றுகள் நடுவதற்கான ஆரம்ப வேலைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை வைகாசி மாதமளவில் பூரணமாக முடிவுறுத்தப்பட்டு நாவிதன்வெளி பிரதேசசெயலகம் புத்துணர்ச்சி பெற்றதாகத் திகழும் என எதிர்பார்க்கப்படுகின்றது





# தொழில் முயற்சியாளர்களின் வியாபார பதிவினை மேற்கொள்வதில் இது வரை இருந்து வந்த தடைநீக்கம்

## பிரதேச செயலாளரின் முயற்சியில்...

### தொழில் முயற்சியாளர்கள் மகிழ்ச்சியில்...

தொழில் முயற்சியினை மேற்கொள்ளும் முயற்சியாளர்கள் தங்களது வியாபார முயற்சியினை சட்ட பூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து 14 நாட்களுக்குள் தங்களது வியாபார முயற்சியை பதிவு செய்து கொள்ள வேண்டும் என வியாபார பதிவு கட்டளைச் சட்டத்தின் 149 வது அத்தியாயம் கூறுகின்றது.

சந்தையில் போட்டி நிறைந்த இக்காலகட்டத்தில் உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதில் பெரும் சவால்கள் நிறைந்து காணப்படுகின்ற நிலையில் வியாபார பதிவினை மேற்கொள்வது பெரும் உபாய மார்க்கமாக காணப்படுகின்றது. பல்வேறு உற்பத்திப்பொருட்களிடையே தங்களது உற்பத்திப் பொருட்களைச் சந்தையில் விற்பனை செய்வது, தங்களது உற்பத்தி மற்றும் தொழில் நிறுவனங்களை காப்புறுதி செய்வது மட்டுமல்லாமல் தங்களது தொழில் முயற்சியினை மேலும் விஸ்தரிப்பதற்கான நிதி மூலகங்களை நிதி நிறுவனங்களில் இருந்து பெற்றுக் கொள்வதற்கும் வியாபாரப்பதிவு இன்றியமையாததொன்றாக காணப்படுகின்றது.

தொழில் முயற்சியாளர்கள் தங்களது வியாபார பதிவினை பிரதேச செயலகத்தில் பதிவு செய்தலின் போது பின்வரும் முக்கியமான ஆவணங்களை அங்கு சமர்ப்பிக்கப்படுதல் அவசியமாகும்.

01.விண்ணப்பபடிவம். 
02.வேண்டுதல் கடிதம் 
03. தேசிய அடையாள அட்டையின் பிரதி. 
04.பிரதேச சபையின் வியாபார அனுமதிப்பத்திரம். 
05.காணி உறுதி பத்திரம் . 
06.பெயர்பலகையின் மாதிரி. 
07.வியாபாரத்தின் தன்மைக்கு ஏற்ப சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்

போன்ற முக்கிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் அவசியமாகும். இங்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களில் மிகப் பிரதானமாக காணப்படுகின்ற ஆவணம் காணி உரிமைப் பத்திரமாகும். நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிக்குட்பட்ட பெரும்பாலான மக்களிடையே காணப்படுகின்ற காணி உரித்துப்பத்திரம் 30, 90 வருடங்கள் என்ற குத்தகை அடிப்படையிலேயே காணி உரிமங்கள் காணப்படுகின்றது. இவ்வாறான காணியில் இடம் பெறுகின்ற வியாபாரம் முயற்சியினை பதிவு செய்வதில் நீண்டகாலமாக பிரச்சனைகள் காணப்பட்டு வந்தன. இதனால் வியாபார பதிவிற்காக சமர்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் ஓரிரண்டை தவிர கூடுதலாக வியாபார பதிவுக்கான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு வந்தன. இச்சந்தர்ப்பங்களில் தொழில் முயற்சியாளர்கள் தங்களது வியாபார முயற்சியை பதிவு செய்துகொள்ள முடியாமையையிட்டு, பல்வேறு இடையூறுகளை எதிர்கொண்டனர். இந்நிலைமையில் தாங்கள் எதிர் நோக்குகின்ற இன்னல்களை நாவிதன்வெளி பிரதேச செயலாளர் செல்வி ஆர். ராகுலநாயகி அம்மணி அவர்களிடம் முறையிட்டுக் கொண்டனர். இது தொடர்பாக விரைந்து கவனம் செலுத்திய பிரதேச செயலாளர் காணிப்பிரிவினரோடு மேற்கொண்ட கலந்துரையாடலை தொடர்ந்து பிரதேசசெயலகத்தின் கணக்காளர் திரு. றிஸ்வி யஹ்சர் அவர்களோடு மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் கணக்காளர் அவர்கள் உடனடியாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களைபதிவு செய்யும் நிறுவனத்தின் பணிப்பாளரோடு தொலைபேசி ஊடாக மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னர் இந்த குத்தகை அடிப்படையில் உரிமை பெற்ற காணிகளில் வியாபாரப்பதிவுக்கு இருந்ததடைஎன்ற ஒரு சிக்கலான நிலமை நீங்கி அதனை பதிவு செய்யலாம் என்ற தீர்வு எட்டப்பட்டது.

நீண்ட காலமாக வியாபார முயற்சியாளர்கள் தங்களது வியாபாரத்தினை பதிவுசெய்து கொள்வதில் இருந்தபெரும் தடை நீக்கப்பட்டுள்ளன என்ற செய்தியை பிரதேச எல்லைக்குள் பொதுமக்கள் கலந்துகொள்ளும் அனைத்து கலந்துரையாடல்கள் ஒன்று கூடல்கள், கூட்டங்கள் என்பனவற்றில் பொதுமக்களுக்கு தெரியப்படுத்துமாறு வலியுறுத்தப்பட்டு அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதனிடையே நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் மூலப் பொருட்களுக்கு ஏற்பட்ட விலையேற்றம் மற்றும் வரி ஏற்றம் என்பன அவர்களின் தொழில் முயற்சியில் பாரியதாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. அதன் விளைவாக அவர்கள் உற்பத்தி நடவடிக்கையில் இருந்து விலகி இருக்க விரும்புவதை அவதானிக்க முடிந்திருந்தது. தங்களது வியாபார பதிவினைரத்து செய்யக் கோரும் விண்ணப்பங்களோடு பிரதேச செயலகத்தை நோக்கி வந்திருந்தமை அதற்கான சுட்டியாக கொள்ள முடிகின்றது.

இவ்வாறு பாதிப்புக்குள்ளான தொழில் முயற்சியாளர்களை அதிலிருந்து மீட்டெடுக்கும் முயற்சியாகவே நாவிதன்வெளி பிரதேச செயலாளர் அவர்கள் ஒவ்வொரு கிராமசேவை பிரிவுகளிலும் துறைசார்ந்த அதிகாரிகளை ஈடுபடுத்தி பாரியளவிலான கலந்துரையாடல் கூட்டங்களைஏற்பாடு செய்து சுயதொழில் முயற்சியாளர்கள் அடையாளம் காணப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அரசின் 2024 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை மேம்படுத்துவதில் அதிக அக்கறை கொண்டிருப்பது இதற்கான காரணமாகும்.

எனவே இவ்வாறான தொழில் முயற்சியாளர்களை பாதுகாக்கப்படுவதற்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் அவர்களுடைய தொழில் முயற்சிகளை பதிவதை இலகுபடுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி என்பன தொடர்பாக தொழில் முயற்சியாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியில் காணப்படுகின்றனர்.

- எம்.ஐ.இஷ்ஹாக் -
அபிவிருத்தி ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்




# உலக அரசியல்

## இந்து சமுத்திரத்தின் விபத்துக்கள், மற்றும் தவறான கணிப்பீடுகள் குறித்து அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனிவொங் எச்சரித்துள்ளார்



- நிருபர்.பி.ரூபன் - இந்து சமுத்திரத்தில் தவறான கணிப்பீடுகள் மற்றும் விபத்துக்களிற்கு எதிரான வெளிப்படைத்தன்மை, மற்றும் உறுதிப்பாடு தேவை என இந்திய வெளிவிவகார அமைச்சர், இலங்கை ஜனாதிபதி ஆகியோர் மத்தியில் உரையாற்றுகையில் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனி வொங் தெரிவித்துள்ளார்.

செங்கடலில் ஈரான் ஆதரவு ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் தங்கள் ஆளில்லா விமானத் தாக்குதல்களை தொடர்கின்றனர். அமெரிக்காவும் பிரிட்டனும் அவர்களிற்கு எதிராக தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. அவுஸ்திரேலியா இந்தத் தாக்குதல்களிற்கு ஆதரவு வழங்கியுள்ளது. இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதியும் இந்திய வெளிவிவகார அமைச்சரும் கலந்து கொண்ட நிகழ்வில் உரையாற்றிய அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் சீனா போன்ற விஸ்தரிப்பு சக்திகள் இந்து சமுத்திர பிராந்தியம் குறித்து அதிக ஆர்வம் காட்டுவதால் செங்கடல் நிலைபோன்ற ஒன்று இந்து சமுத்திரத்தில் ஏற்படலாம் எனத் தெரிவித்துள்ளார்..

தாய்வான், மலாக்கா நீரிணை போன்றவற்றினால் மூளக்கூடிய மோதல்கள் மிகவும் ஆபத்தானவையாகக் காணப்படும் எனத் தெரிவித்துள்ள பெனிவொங்மோதல் எனத் தெரிவிக்கக்கூடிய ஏனைய மோதல்கள் குறித்து கரிசனை வெளியிட்டுள்ளார்.

இந்து சமுத்திரத்தின் ஊடாகவே உலகின் சரக்குக் கப்பல்கள் போக்குவரத்தும் உலகளாவிய எண்ணெய் ஏற்றுமதியும் பெருமளவிற்கு இடம்பெறுகின்றது எனவும் தெரிவித்துள்ள அவர் கடற்கொள்ளை சர்ச்சைகள்,குழப்பங்கள் காரணமாக பாதிப்பு ஏற்பட்டால் சர்வதேச அளவில் பாரிய பாதிப்பு ஏற்படும். செங்கடல் விடயத்தில் இதனை அவதானிக்க முடிந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

## வடகொரியாவின் தொடர் ஏவுகணை சோதனையால் பதற்றம்

வடகொரியா தனது தொடர் ஏவுகணை சோதனையால் கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை ஏற்படுத்தி வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதனால் தங்களது பாதுகாப்பு கருதி தென்கொரியாவும், ஜப்பானும் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன. குறித்த கூட்டுப்போர் பயிற்சி தங்களுக்கு எதிரான போர் ஒத்திகை என கருதும் வடகொரியா இந்த பயிற்சியை கைவிட வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனை பொருட்படுத்தாத தென் கொரியா அமெரிக்காவுடன் இணைந்து மீண்டும் கூட்டுப் போர் பயிற்சியில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. அப்போது போர் விமானங்களை இடைமறித்து தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பயிற்சி களில் ஈடுபட்டதாக தென்கொரிய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# துப்பறியும் தொடர்...

## நடமாடும் நடைப்பிணங்கள்

**(சிறுகதை) வெல்லவூர் சுபேதன்**

எழில் மிகுகிராமம் ஒன்று.

அங்கு கந்தையா தனது பூர்வீகத் தொழிலான விவசாயத் தொழிலையே தனது தாயிற்கு ஒப்பாக நினைத்துத் தொழுது குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஒருநாள் குடும்பத்தாரான மனைவி காமாட்சி, மகள் சிந்தாமணி, மகன் நளன் ஆகியோருடன் தனது வயலைப் பார்வையிட்டு மனமகிழ்வுடன் வீடு திரும்புகிறார்.

கந்தையா..... கந்தையா..... என்ற அலறல் குரலுடன் கந்தப்பு ஓடோடி வருகிறான். கந்தையாவின் வீடு தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பதையும் கூறினான். கந்தையா குடும்பத்துடன் வீடு சென்று பார்க்கிறார். வீடு முழுவதும் எரிந்து சாம்பலாகி தவிடுபொடியான நிலையில் காட்சியளித்தது.

கந்தையா செய்வதறியாது தவித்தார். காமாட்சி மனமுடைந்து பரிதவித்தாள். மகன், மகள் இருவரும் அழுதவாறே இருக்க நடந்தவற்றை மீண்டும் தூசிதட்ட விரும்பாது தனது கிராமத்தில் கிடைத்தவற்றை வைத்து ஓர் குடிசையொன்றை கட்டி மீண்டும் பழமையான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். வேளாண்மையும் அறுவடைக் காலத்தினை நெருங்கிக் கொண்டிருந்தது. பக்கத்து வயல்காரர்கள் எல்லோ ரும் திருப்தியானமுறையில் அறுவடை செய்ததன் பலனாக காவல் தெய்வமான ஐய்யனாருக்கு படையல் செய்து மகிழ்ச்சியில் குதூகலித்துக் களிக்கின்றனர்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போலவே அறுவடை நிகழாது ஒற்றையாக செழித்த வயல் கந்தையாவினுடையதே. எந்தப் பாவிசெய்தானோ தெரியவில்லை அடுத்த போகவேளாண்மை செய்வதற்கென தேக்கி வைத்த குளத்து வான்கதவுகளைத் திறந்து கந்தையாவின் வயலைச் சேதமாக்கி விட்டனர். தலையிலடித்தவாறே மண்டியிட்ட நிலையில் அழுது புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். வஞ்சகம் செய்தவர் யாரென்று தெரியாததனால் கிராமத் தலைவர்களாலும் எதுவும் செய்யமுடியவில்லை.

பசி, பட்டினி வயிற்றை உலுக்க குழந்தைகள் அழுதனர். வீடு எரிந்ததில் கையீடு ஏதுமில்லாமல் தவித்த கந்தையா குடும்பத்தினருக்கு வயல்தான் எல்லாமே. வயலும் இப்படி சேதமாக உறவினர் உதவியுடன் மகள் சிந்தாமணியை பட்டணத்துக்கு படிக்க அனுப்புகின்றனர் .

பண்ணையார் வீட்டில் வேலைக்குச் சென்று காமாட்சி பாத்திரம் தேய்க்க கந்தையா மந்தை மேய்க்க சென்று வருவார்.

குடும்பம் ஓரளவு மீண்டு வருகின்ற தருணம் மகன் நளன் தமது நண்பர்களுடன் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தவாறே யாரெனத் தெரியாத ஒருவரால் நீரில் அமிழ்த்தி உயிர் நீங்கப் பெற்றான். இச்செய்தி கந்தையா, காமாட்சியை பாடையில் போட்டது. சிந்தாமணியும் கண்ணீர் வடித்தவாறே பட்டணத்தில் இருந்து கிராமத்துக்கு புறப்பட்ட சேதி கந்தையா காதை எட்டியது.

அவள் ஏறிய பேருந்தில் இருந்த சில கயவர்களால் பல்வேறு துன்புறுத்தல்களுக்கும் உள்ளானாள். தன்னைக்காக்க முயன்று வலுவற்றுப் போனாள் சிந்தாமணி. அப்போது சிந்தாமணியின் காதில் அழுகுரல் ஒன்று கேட்டது. திடுக்கிட்டு எழும்பினாள். தன் ஊர் வந்துவிடவே பேருந்திலிருந்து இறங்கி, ஓட்டமும் நடையுமாக, வீடு நோக்கி ஓடினாள். திண்ணைக்கட்டில் அழுதவாறே கந்தையா சாய்ந்திருந்தார். வீடு வந்த சிந்தாமணி தம்பியின் உடலைக்கூடப் பார்க்காமல் தந்தையின் கால்களைப் பிடித்து அழுது கொண்டிருந்தாள். கந்தையாவும் மகளை ஆறுதல் படுத்த முயன்று, தோற்றுப்போனார். சிந்தாமணியும் தன்னிலை மறந்து வீட்டுச் சுவரில் பல்லி போல் ஒட்டிக் கொண்டாள். அவள் அழுவது யாருக்கும் புரியவில்லை, அவளைத் தவிர... (முற்றும்)

### விண்டோஸ் பணிச்செயல் முறைமைக்கான குறுக்குச் சாவிகள்

Ctrl + X - Cut the selected item.

Ctrl + C - Copy the selected item.

Ctrl + V - Paste the selected item.

Ctrl + Shift + V - Paste as plain text

Ctrl + Z - Undo an action.

Alt + Tab - Switch between open apps.

Alt + F4 - Shutdown the computer

Windows key + L - Lock your PC.

Windows key + D - Display & hide desktop

F2 - Rename the selected item.

F3 - Search file or folder in File Explorer.

F5 - Refresh the active window

Alt + Enter - Display properties for selected items

Ctrl + A - Select all items in a document

Ctrl + D - Delete the selected item and move it to the Recycle Bin.

அ.சனோஜன்

## "மர்மக் கிராமம்"

**(மர்மத்தொடர்...)**

**வீரப்பதி - அருள் மல்லிகா**

அமாவாசை காலம் இருள் சூழ்ந்த அந்த மாலைப் பொழுதில் அடர்ந்த காட்டிலிருந்து மந்தைகளை மேய்த்து வந்தவன் பதை பதைப்பாய் ஓடிச் செல்ல அவன் பின்னேதன் உயிரைக் காக்க தமது கிராமத்தை நோக்கி மந்தைகளும் ஓடுகின்றன. "நேரம் ஏழு மணியாகி விட்டது...ஏழு மணியாகி விட்டது...என்று தெருவெங்கும் கத்திக் கொண்டு அவன் தனது சேனைக்கிராமத்தினூடாக ஓட அதுகண்டு இடியோசை கேட்ட நாகம் போல் அக் கிராமத்திலுள்ள அனைவரும் தமது வீட்டினுள் சென்றுகதவுகளை இறுக்க மூடிக் கொண்டனர். விவாசாயிகள், கூலிகள், என அக்கிராம மக்கள் அனைவரும் தமது வீட்டுக் கதவுகளை ஏழு மணிக்கேமூடி தமதுஉயிருக்குரிய பாதுகாப்பை தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

சேனையூர் கிராமம் சுற்றிவர காடுகளுக்கு நடுவே அமைந்த ஓர் எல்லைப்புற கிராமம். மந்தை வளர்ப்பையும் சேனைப் பயிரையும் நம்பி வாழ்க்கை நடத்தும் பல வறிய குடும்பங்கள் அங்கே உள்ளன. கல்வியறிவு குறைந்த பாமரர் வாழும் அக்கிராமத்தில் அண்மைக்காலமாக சிலர் இரவில் மர்மமான முறையில் இறந்து கிடப்பதையும் ஊரார் அறிந்தனர். அதற்கு காரணம் அக் கிராமத்தில் இரவில் ஊர் எல்லையில் பேய் பிசாசு நடமாட்டம் இருப்பதாகவும், அதனால் அவ்விடத்திற்குச் செல்வோரை அது அடிப்பதாகவும் இரத்தம் கக்கி சாவதாகவும் சிலர் கூற, இன்னும் சிலர் காட்டிலுள்ள புலி நடமாட்டமே இதற்குக் காரணம் எனவும் நம்பினர். இதனால் அக் கிராமமக்கள் மாலை ஏழு மணிக்குமேல் எவரும் வீதியில் நடமாட்டமில்லாமல் வீடுகளிலேயே கதவை அடைத்து தங்கள் பாதுகாப்பை உறுதி செய்வர்.

அவ் வேளையில் திடீரென அக்கிராம பதினைந்தாம் இலக்கமிடப்பட்டிருந்த ஊர்த் தலைவரான நல்லதம்பியின் வீட்டுக் கதவில் "டொக்..டொக்.. டொக்.டொக்.."-என்று தட்டும் ஓசைகேட்டது. திடுக்கிட்டவாறே பயத்துடன் மெல்ல வந்து கதவை சற்று திறந்து..........(தொடரும்)

## உரித்து ஒரு தேசிய....

குறித்த தேசிய வேலைத்திட்டமானது, இலங்கை திருநாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, கடந்த 2024.02.05 ஆம் திகதி தம்புள்ள – ரங்கிரி தம்புளு சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இவ்வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வில் வழங்கப்பட்ட உரித்து ஆவணங்களைப் பெறுவதற்காக நாடாளவிய ரீதியில் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களும் பயனாளிகளை ஒருங்கி ணைத்து அழைத்துச் சென்றமை சிறப்பான விடயமா–கும்.

இதன்போது 10,000 உரித்து ஆவணங்கள் வழங்கப்பட்டன என்பதுடன், குறித்த தேசிய வேலைத்திட்டத்தில் அம்பாரை மாவட்டத்திலுள்ள நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவில் 67 பயனாளிகள் தெரிவாகியிருந்தமையும், உரித்து ஆவணங்கள் 206 பயனாளிகளுக்கு தயார் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்–தக்கது.

அதுமாத்திரமின்றி, எதிர்வரும் 3 வருடத்துக்குள் 20 இலட்சம் உரித்து காணி அளிப்புப் பத்திரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் எனும் ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலுக்கு இணங்க குறித்த தேசிய வேலைத்–திட்டம் நாடெங்கிலும் சூடு பிடித்திருக்கிறது எனும் தகவலும் கிடைக்கப் பெற்றுள்ளது.

## இ-வரவேற்பு கரும பீடம்..

நாவிதன்வெளிப் பிரதேச செயலகத்துக்கு சேவைப்பெறுநர்களாக தினமும் வருகை தருகின்ற பொதுமக்களின் சேவைத்தேவை தொடர்பான விபரங்களை கணனி மயப்படுத்துவதோடு அவர்களது சேவை தொடர்பான நிகழ்நிலைத் தகவல்களை உரிய சேவைப்பிரிவுகள் மூலமாக இற்றைப்படுத்தி வைப்பதன் மூலம் குறித்த சேவை பெறுநர்களுக்கு வரவேற்பு கரும பீடத்திலேயே அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளுக்குரிய தற்போதைய நிலை தொடர்பாக தெரிவிக்க முடிவதால், பொதுமக்களின் தேவையற்ற காத்திருப்பு மற்றும் ஏனைய பல்வேறு பிரச்சினைகள் குறைக்கப்படு வதால் பிரதேச செயலகத்தின் பொது மக்களுக்கான சேவையின் தரம் அதிகரிக் கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பால் உற்பத்தி...

கொண்டனர்.

பால் உற்பத்திக்காகவும், பாற் பண்ணை ஒன்றினை இஸ்தா பித்து நடைமுறைப்படுத்துவ–தற்காகவும், பண்ணையாளர் களை ஒருங்கிணைக்கும் செயற்திட்டத்தில் நாவிதன் வெளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர்கள், பொருளா தார அபிவிருத்தி உத்தியோ–கத்தர்கள்ஆகியோர் பெரும் பங்காற்றி இருந்தமை குறிப்பி டத்தக்கது .

# இலங்கையின் அரசகாணியும்; ஜனாதிபதியின் தற்போதைய நிலைப்பாடும்!!!

இதுவரை காலமும் இலங்கைத் தீவின் காணியின் பெரும் பகுதி அரச உடமையாகவும், அதன் நிறைவேற்று உரிமை அரசிடமுமே காணப்பட்டு வந்திருந்தது. 1927ஆம் ஆண்டு காணிக்கென ஒரு காணி ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது முதல், இலங்கையின் காணிகள் அனைத்தும் குறித்த திணைக்கள-த்திற்கு பாராதீனம் செய்யப்பட்டு நிருவகிக்கப்பட்டது.

பின்னர் 1931ஆம் ஆண்டுகாணி ஆணையாளர் திணைக்களம் உருவாக்கப்பட்டு தொடர்ந்து பல உதவிக்காணிஆணையாளர் அலுவலகங்கள் உருவாக்கப்பட்டு காணி உத்தியோகத்தர், மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர்களைக் கொண்டு குறித்த திணைக் களத்தின் செயற்பாடுகள் நிருவகிக்கப்பட்டதற்கு இணங்க, 2014ஆம் ஆண்டின் பின்னர் குறித்த திணைக்களம் "காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்" என தரம் உயர்த்தப்பட்டது. 1931ஆம் ஆண்டு காணி தீர்வுச் சட்டத்தின் கீழ் தனியார் காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு வேறாக்கப் பட்டது. அதன் பிற்பாடு 1935ஆம் ஆண்டு காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டது.

குறித்த அபிவிருத்தி கட்டளைச் சட்டத்திற்கிணங்க காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்தினால் ஐந்து முக்கிய பிரிவின் கீழ் காணிக் கச்சேரி மூலம் பொது மக்களுக்கான காணி ஆவணம் வழங்கும் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. எது எவ்வாறு இருப்பினும் இறுதியில் காணிக்கான முழு உரிமம் உரிய பொதுமக்களுக்கு முற்று முழு வழங்கப்படவில்லை. அது அரச நிருவாகத்தின் பொறுப்பிலேயே இருந்து வந்துள்ளது.

இவை அனைத்துக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் விதத்திலும், கடந்த காலங்களில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை அல்லாதொழிக்கும் நோக்கிலும், நாட்டின் அதி மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவில் உதித்த, "என் நாடு என் உரிமை" என்னும் தொனிப்பொருளின் அடிப்படையில், 2024ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் இத் தேசிய வேலைத்திட்டம் முன்மொழியப்பட்டு, பாராளுமன்ற அங்கீகாரத் தினையும் பெற்றிருந்தது. இதற்கிணங்க, காணிமற்றும் சுற்றுலா அமைச்சின் குறித்த விடயம் சார்பிலான 2023.12.06 ஆம் திகதி 23/2379/615/067 ஆம் இலக்க பரிந்துரைக்கு ஏற்பவும், 2023.12.11ம் திகதிய அமைச்சரவை அனுமதிக்கு ஏற்பவும் குறித்த வேலைத்திட்டம் "உரிமை வேலைத் திட்டம்" என்னும் தொனிப்பொருளில் மூன்று கட்டங்களாக இருபது இலட்சம் பொதுமக்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி காணி ஆணையாளர் நாயகத்தின் 2023/01 என்னும் இலக்க "உரிமை வேலைத்திட்டம்" சுற்றுநிருபத்தின்படி ஏற்கனவே 1969ஆம் ஆண்டு 16ஆம் இலக்கச் சட்டம், 2022ஆம் ஆண்டு 11ஆம் இலக்கச் சட்டம், 1935ஆம் ஆண்டு 20ஆம் இலக்கக் காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற பொது மக்களுக்கு 1947ஆம் ஆண்டு அரச காணிக் கட்டளைச்சட்டத்தின் 2வது பிரிவின் கீழ் பூரண உரிமை வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

குறித்த வேலைத்திட்டத்தின் ஆவணம் வழங்கும் நிகழ்வானது முதற்கட்டமாக இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 2023.02.05ஆம் திகதி பிரமாண்டமாக தம்புள்ளை ரங்கிரி சர்வதேச விளையாட்டு மைதானத்தில் சுமார் பத்தாயிரம் பொது மக்களுக்கு உரித்து ஆவணம் வழங்குவதற்கு என ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் உரித்து பூரண அளிப்பு பத்திரம் உத்தியோக-பூர்வமாக அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களினால் பொது மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து சுமார் 1600இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டது மட்டு மல்லாது நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவின் 67 பேர் குறித்த அளிப்பினைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறு இருப்பினும் நாட்டின் தற்போதைய பொருளதார நெருக்கடியில் ஜனாதிபதி அவர்களின் இம் முடிவானது, நாட்டை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் என்ற நம்பிக்கையில் அனைவராலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

திரு.என்.எம்.எம்.அஸ்லம் சுஜான்
குடியேற்ற உத்தியோகத்தர்
காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்
பிரதேச செயலகம், நாவிதன்வெளி

## கடந்த மாதம் இடம்பெற்ற குறுக்கெழுத்துப் போட்டி இல.01 க்கான விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ம | 2 ணி | 3 மே | க | 4 லை | ■ | 5 வி |
| 6 ர | த | ம் | ■ | 7 வ | 8 ரை | பு |
| க | ■ | 9 க | ம | ல | ம் | ■ |
| 10 த | 11 டி | ■ | 12 த | அ | ர | 13 ம் |
| 14 ம் | கு | 15 ப | ம் | ■ | 16 ப | டி |
| ■ | ■ | ல் | ■ | 17 ம் | ப | க |
| 18 அ | ல் | லி | ■ | ஆ | ■ | த |

நாவெளி

குறுக்கெழுத்துப்போட்டி இல.01

### பரிசு பெறுவோர் :

### முதலாம் இடம்

**ஜே.எப்.மிர்பா**

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், நாவிதன்வெளி

### இரண்டாம் இடம்

**ஏ.எல்.எம்.சினாஸ்**

கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
நாவிதன்வெளி

# குறுக்கெழுத்துப் போட்டி இல.02

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | | | 4 |
| | ■ | 5 | | | ■ | ■ | |
| | ■ | | ■ | 6 | | | |
| 7 | 8 | | 9 | | ■ | ■ | |
| ■ | | ■ | | ■ | 10 | | ■ |
| 11 | | | | ■ | | ■ | 12 |
| 13 | | ■ | ■ | ■ | 14 | | |
| | ■ | 15 | | | | ■ | |

**இடமிருந்து வலம்.**

01. இருப்பிடங்களின் வரிசையில் இதுவும் ஒன்று.
03. நோய் தீர்க்கப் பயன்படுவது.
05. சமுத்திரம் என்றும் சொல்லலாம். (குழம்பி)
06. வலியோரால் மிரட்டி வசூலிக்கப்படுவதும் உண்டு. (குழம்பி)
07. இதுவும் உடையில் ஒருவகை. (குழம்பி)
10. இது யாவருக்கும் பொதுவானது.
11. சட்டியில் இருந்தால்தான் இதில் வருமாம். (குழம்பி)
13. பறவைக்கு சொல்வது. (குழம்பி)
14. நாணயம் எண்ணினால் இதுவும் வரும்.
15. தொண்டையிலிருந்து வாயால் வெளிப்படுவது.

**மேலிருந்து கீழ்**

1. இதுவும் மருந்தும் மூன்று நாளென்பர்.
02. இப்படியும் ஒரு கல்யாணம் உண்டு.(குழம்பி)
03. சமப்படுத்தலையும் குறிக்கும். (குழம்பி)
04. நிர்க்கதி நிலையை இது இல்லாத படகு போல என்பர்.
08. கல்வி என்றும் சொல்லலாம்
09. இதில் குண்டுமணியும் கிடக்குமாம்.(குழம்பி)
10. நீரில் நிகழ்த்தப்படும் இதுவும் ஒரு உயற்பயிற்சிதான்.
11. இதுவும் ஒரு செடிதான்.
12. அளவை ஒன்று.




முதலாம் பரிசு - 200/=
இரண்டாம் பரிசு - 150/=
மூன்றாம் பரிசு - 100/=

இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2024.03.05 ஆம் திகதி பி.ப.4.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.

# கல்வியின் சிறப்பு

கல்வி என்பது இந்த உலகில் பெரிதாக மதிக்கப்படும் ஒன்று. “கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக் கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம்” என்பது நெல்சன் மண்டேலாவின் வாக்கு. ஒரு மரத்திற்கு எப்படி அதன் வேர் முக்கியமோ அதேபோல்தான் மனிதனுக்குக் கல்வி இன்றைய வாழ்க்கை முறையில் கல்வி என்பது ஓர் அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவையாக மாறிவிட்டது. ஆனால் கல்வியை மட்டும் வைத்துக் கொண்டு மனிதன் வாழ்க்கையில் உயரிய நிலைகளுக்குச் செல்ல இயலாது. வாழ்க்கை மேம்படவும் நன்றாக இருக்கவும் கல்வி அவசியம் தான். எனினும் நல்ல பண்புகளும் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் இருந்தால்தான் வாழ்க்கை பூரணமாகும். ஆதலால், மனிதனின் வாழ்க்கை மேம்படுவதற்குக் கல்வி மட்டும் போதாது எனும் கருத்தை ஒட்டி இந்தக் கட்டுரை அமைகிறது.




கல்வி கற்பதால் நாம் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்குச் செல்ல இயலும். நன்றாகப் படிப்பதன் மூலம் நம்மால் ஒருநல்ல வேலைக்குச் செல்லமுடியும். நல்ல வேலைகள் என்று குறிப்பிடும்போது இரு கைகளை நிரப்பும் அளவு சம்பளத்தை கொடுக்கும் வேலைகளையே குறிக்கின்றன. சம்பளம் பெரிதாக இருப்பதால் நம்மால் வாகனம், வீடு, நகை போன்ற ஆடம்பரங்களை அனுபவிக்கலாம். நினைத்த பொருட்களை வாங்கலாம். எனவே, நல்ல கல்வியின் மூலம் ஆடம்பரத்தைப் பெற்றுக்கொள்ள இயலுவதோடு, நல்ல வாழ்க்கை நிலையும் நமக்கு உண்டாகிறது.

ஆனால் வாழ்க்கையில் நாம் பொருளாதாரத்தில் மட்டும் மேம்பட்டால் போதுமா? பிறர் நம்மைப் பார்த்து மதிப்பதும், நமது வாழ்க்கையை மேம்படுத்தும். பிறர் நம்மைப் பார்த்து மதிப்பதென்பது நல்ல பண்புகளை உள்ளடக்கியிருந்தாலே முடியும். கல்வி மட்டும் போதுமென்றால் ஏன் பள்ளிகளில் மாணவர்களுக்கு இணைப்பாட நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. பண்புகளுக்கும் மனிதனுடைய வாழ்க்கையில் மதிப்புள்ளதே இதற்கு காரணம் ஆகும். இவற்றிலிருந்து கற்றுக் கொள்வது விடாமுயற்சி, தோல்வியிலிருந்து மீளும் தம்மைப் போன்ற நற்பண்புகள் மூலம் நமது மதிப்பு உயர்வதும், நமது வாழ்க்கை மேம்படுவதும் உறுதி. எனவே மாணவர்களாகிய நாம் பாடசாலைக் காலத்திலே கல்வியின் பெருமையினை உணர்ந்து, அதனை இடைவிடாது கற்று சமூகத்தில் சிறந்த பண்புள்ள பிரஜையாக மிளிர வேண்டும்.

**“ கற்ககசடறக் கற்றவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக”**

தொகுப்பு:
ஜே. ஜதுசன்
சக்தி சிறுவர் கழகம் - அன்னமலை -01

# பாடசாலை இடைவிலகிய மாணவர்களுக்கான தொழிற்கல்வி பயிற்சிநெறியைப் பெற்றுக் கொள்ள அரிய சந்தர்ப்பம்.

நாம் இலக்குகளையும், வெற்றிகளையும் அடையமுடிவது சிறந்த சிந்தனைகளுடன் எடுக்கும் முடிவிலேயா-கும். தொழில்நுட்பகல்வி வணிகமுறைப்படுத்தப்பட்டு வேலையற்ற சனத்தொகையின் விகிதாசாரம் மேலோங்கி இருக்கும் இக் காலகட்டத்தில், குறிப்பாக நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களின் பொருளாதாரப் பின்னடைவும், போக்குவரத்து வசதியின்மையும் காரணமாக அம்மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலை செல்லும் மாணவர்களின் இடைவிலகலும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. இவ்வாறாக இடைவிலகிய இளைஞர்கள், யுவதிகளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட அரச நிறுவனங்களின் தொழில் கல்விசான்றிதழ் இன்மையால் அவர்கள் அரசதொழில், அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமத்தை எதிர் நோக்குவதுடன் பொருளாதார நெருக்கடிக்கும் தள்ளப்படுகின்றனர்.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் ஆலோசனையிலும், வழிகாட்டுதலிலும் இவ்வாறான பாடசாலைகல்வி முடித்த, இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் வகையில் தொழிற்கல்வி பயிற்சி நெறியுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களுடன் அவர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

அந்த வகையில் அவர்களின் கனவை நனவாக்க கல்வி அமைச்சின் கீழ் உள்வாங்கப்பட்டிருக்கும் திறன்கள் அபிவிருத்தி தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பிரிவு அமைச்சினால் நடாத்தப்படுகின்ற தொழில் நுட்பக்கல்லூரிகள், தொழில்நுட்பவியல் கல்லூரிகளிலும் அதேபோன்று மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழு VTA, DVTC, VTC, NAITA என்பனவற்றின் தொழில் கல்விபயிற்சி நெறிகள் காணப்படுகி-ன்றன. அந்த வகையில் நாவிதன்வெளி பிரதேசத்தில் மத்திய முகாமில் அமைந்து இருக்கும் தொழிற் பயிற்சி (VTC) நிறுவனத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்கள் ( ICT Technician), தையல் பயிற்சி (Tailoring Ladies), அலுமினியம் பொருத்துநர் (Aluminum Fabricator), மின்னியலாளர் (Electrician), மரக் கைவினைஞர் (தளபாடம் – Wood Craftsman) போன்ற பாடநெறிகளும், நாவிதன்வெளி பிரதேசசெயலகத்-தினுள் முற்றிலும் இலவசமான தையல் பயிற்சி பாடநெறியும், விதாதா வளநிலையத்தில் மின்னிணைப்பு இயந்திர சாதனங்கள் (கையடக்கத் தொலைபேசி), கேக் வகைகள், மிக்ஸர் (Mixer), ஜாம் போன்ற பயிற்சி நெறிகளில் அவர்களை இணைப்பதன் மூலம் NVQ Level – 03 முதல் உயர் டிப்ளோமா பட்டப்படிப்பு வரைக்கும் செல்வதன் மூலம் அவர்களை தொழிற்கல்வி பயிற்சி பாடநெறியினைப் பூர்த்தி செய்த ஒருதிறன் உள்ள தொழிற்கல்வி பயிற்சியாளராக அவர்கள் வெளியேற முடியும். இதன் மூலம் அதிக சம்பளத்துடனான வெளிநாட்டு வேலைவாய்ப்பு, உள்ளூர் அரச, தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதற்காக இளைஞர்கள், யுவதிகள் தங்களது எதிர்காலத்தையும் வீட்டினதும், நாட்டினதும் பொருளாதார-த்தைக் கட்டியெழுப்பும் வகையில் இவ்வாறான பயிற்சி நெறிகளை மேற்கொள்வதற்கு முன்வரவேண்டும். இச் செயற்திட்டத்தை நீங்கள் செய்வதற்கு எப்பொழுதும் நாவிதன்வெளி பிரதேச செயலகம் உறுதுணையாக இருந்து வருகின்றது.

– ஐ.சுல்பிக்கா –

# தகவல் அறியும் உரிமைச் சட்டமும், பொது மக்களுக்கான விழிப்புணர்வும்.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு அதன் 14(அ) என்னும் உறுப்புரையில் தகவலைப் பெற அணுகுதலுக்கான உரிமையை உத்தரவாதம் செய்வதுடன், தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமைக்கு பயன் கொடுப்பதன் மூலம் பகிரங்க அதிகாரசபைகளின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறும் பண்பாட்டை பேணிவளர்த்து அதன் மூலம் இலங்கை மக்கள் ஊழலை எதிர்த்து நிற்றல் மற்றும் பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துதல் ஊடாக முழுமையாகப் பங்கேற்கக் கூடியதும் நாட்டின் பொதுவாழ்வில் தீவிரமாக பங்கேற்கக் கூடியதுமாக விருக்கும் ஒருதேவைப்பாடு உள்ளமையினால் இத்தேவைப்பாட்டினை நாட்டுமக்களும் நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தகவலுக்கான உரிமைச்சட்டம் இலங்கை சனநாயக சோசலிச குடியரசினால் கொண்டுவரப்பட்டது.

இந்த தகவலுக்கான உரிமைச்சட்டத்தின் மூலம்

1. தகவலைப் பெற அணுகுதலுக்கான உரிமைக்கு ஏற்பாடு செய்வதற்கும்
2. அணுகுவதற்கு மறுக்கப்படக்கூடிய விடயங்களைக் குறித்துரைப்பதற்கும்
3. தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினைத் தாபிப்பதற்கும்
4. தகவல் அலுவலர்களின் நியமனத்திற்கும்
5. தகவலைப் பெறுவதற்கான நடவடிக்கை முறைகளை தருவதற்கும்
6. அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த தகவலுக்கான உரிமைச்சட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு ஒருதகவல் அலுவலர் நியமிக்கப்படும் வரை ஒரு பகிரங்க அதிகார சபையின் தலைவர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பகிரங்க அதிகாரசபையின் தகவல் அலுவலராகக் கருதப்படுவார். இச்சட்டத்தின் கீழ் அவர் மீது சுமத்தப்பட்ட கடமையை தகுந்தவாறு புரிவதற்கு அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறு வேறெவரேனும் அலுவலரின் உதவியைத் தகவல் அலுவலர் நாடிப்பெறலாம் என்பதுடன் அத்தகைய எவரேனும் அலுவலரிடமிருந்து உதவி நாடப்படுமிடத்து கோரப்படும் உதவியை அளித்தல் அத்தகைய அலுவலரின் கடமையாகும்.

இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் தகவலைப் பெறவிரும்பும் எவரேனும் பிரசை, தோதான தகவல் அலுவலருக்கு கோரப்படும் தகவல் பற்றிய விபரங்களைக் குறித்துரைக்கின்ற எழுத்திலான ஒரு கோரிக்கையை செய்தல் வேண்டும். ஆயினும் கோரிக்கையை செய்யும் எவரேனும் பிரசை அத்தகைய கோரிக்கையை எழுத்தில் செய்யவியலாததாகவிருக்குமிடத்து அவர் வாய்மூலம் கோரிக்கையை செய்ய உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன் அப்பிரசை சார்பில் அத்தகைய கோரிக்கையை எழுத்திலிடுதல் தோதான தகவல் அலுவரின் கடமையாதல் வேண்டும்.

1. தகவலை இனங்காணச் செய்வதற்கு தகவல் அலுவலரை இயலச் செய்ய நியாயமாக இருக்கக்கூடியவாறான கோரப்பட்ட தகவல் சம்பந்தமான அத்தகைய விபரங்களை வழங்குதல் வேண்டும்.
2. வடிவத்தின் தன்மையையும் எந்தமொழியில் பெற விரும்புகின்றாரோ அந்த மொழியினையும் குறிப்பிட வேண்டும்.
3. தகவலானது ஆளொருவரின் உயிர் அல்லது சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு அவசியமாக இருக்கக் கூடியதெனப் பிரசையினால் நம்புகின்றவிடத்து, நம்பிக்கைக்கான அடிப்படை உட்பட கூற்றொன்றை உள்ளடக்குதல் வேண்டும்.
4. அவரைத் தொடர்பு கொள்வதற்கு அவசியமாகவிருக்கக் கூடிய தகவல் தவிர, தகவலைத் தேவைப்படுத்துவதற்கான ஏதேனும் காரணம் அல்லது வேறு ஏதேனும் தனிப்பட்ட விபரங்களை கொடுக்கும்படி தேவைப்படுத்தப்படுதலாகாது.

தகவலுக்கான கோரிக்கையொன்று பிரசையிடமிருந்து கிடைக்கப் பெற்றவுடன் தகவல் அலுவலர் இயன்றளவு விரைவாக கோரிக்கை ஒன்றின் பெறுகையின் பதின்நான்கு வேலைநாட்களுக்குள் (14) தீர்மானிக்கப்பட்ட கட்டணம் ஒன்றின் கொடுப்பனவின் மீது கோரப்பட்ட தகவலை, ஒன்றில் வழங்குவதற்கு அல்லது வேண்டுகோளை நிராகரிப்பதற்கு முடிவு ஒன்றை எடுத்தல் வேண்டும் என்பதுடன் கோரிக்கை விடுத்த பிரசைக்கு அத்தகைய முடிவை உடனடுத்து அறிவித்தலும் வேண்டும். ஆனாலும் தகவலுக்கான கோரிக்கையானது ஒருபிரசையின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்கின்றவிடத்து அதற்கான பதிலளிப்பானது கோரிக்கை கிடைக்கப்பெற்றதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.

## தொகுப்பு

சட்டத்தரணி .பு.நித்தியானந்தன்
மேலதிக மாவட்ட பதிவாளர்

சட்டத்தரணி.எம்.எம்.எம்.முபீன்
சமுர்த்தி வங்கி முகாமையாளர்

# தொன்மை மிக்க வரலாற்றினைக் கொண்ட கதிர்காம முருகன் ஆலயம்

**கலாபூசணம் நவநாயகமூர்த்தி**

ஈழத்தில் பண்டைய முருக வழிபாட்டில் முதன்மை பெற்ற இடங்களில் கதிர்காமமும் ஒன்றாகும். ஈழத்தின் தென்திசையில் மாணிக்ககங்கை கரையில் இது அமைந்துள்ளது. கதிர்காமத்தின் தொடர்ச்சியான வரலாற்றினை ஈழத்தின் ஏனைய இந்து ஆலயங்களைப் போல கட்டி எழுப்புவதற்கு போதிய தடையங்கள் காணக்கிடைக்கா விட்டாலும் காணக்கிடைக்கின்ற சான்றுகள் இதன் வரலாற்றுத் தொன்மையை உணர்த்துகின்றன.

கதிர்காமத்தலத்தின் மகிமை பற்றி பழந்தமிழ் இலக்கியங்களான கந்தப்புராணம், மகேந்திரயுத்த காண்டத்திலும், தெட்சண கைலாயபுராணம், மச்சபுராணம், சுப்ரமண்யபுராணம், பராக்கிரமம் ஆகியன குறிப்பிடுகின்றன. இத்திருத்தலம் பற்றி திரிக்கோணேச்சலப் புராணம் பின்வருமாறு குறிப்பிடும்.

"கந்தவேள் குறக் கொடிதனைப் புனத்திற்
கண்டரு ஒட்டரும் கடிமணம் புணர்ந்து
வந்தவாறு மட்டாய்வரன் முறையே மகிழ்ந்து
போற்று முத்துலிங்கதேசிகர் தம்
சிந்தை அன்புறத் தெரிசனை காட்டிச்
சிறந்தநல் விளையாடல் செய்திருக்குஞ்
சுந்தரக் கதிர்காமநல் தலமும் சூழும்"
(பாடல் 36 : வரி 6--7)

இவ்வாறு கதிர்காம முருகன் ஆலயத்தின் தொன்மைச் சிறப்புக்கள் பற்றி இப்பழந்தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை கதிர்காமத் தலத் தோற்றம் பற்றியும் இவ்வாலய வரலாறு பற்றியும் தொல்லியல் ரீதியாக நோக்குமிடத்து ஈழத்தில் திராவிடருக்கேயுரித்தான பெருங்கற்பண்பாடு நிலவியிருந்த காலத்தில் (கி.மு 1000-300) கதிர்காமம் தோன்றியதென அறிய முடிகின்றது. அக்காலகட்டத்தில் கதிர்காமப் பகுதியில் வாழ்ந்து வந்தவர்களும் ஈழத்தின் பூர்வீக குடியினருமான நாகர், இயக்கர், வேடர் என்ற திராவிடக் குலங்களிடையே நிலவி வந்த வேல் வழிபாட்டின் தொடர்ச்சியே பிற்காலத்தில் முருக வழிபாடாக மலர்ந்தது.

இதனை விளங்கக்கூறுமிடத்து இலங்கையில் பெருங்கற்பண்பாடு நிலவியிருந்த காலத்தில் கி.முஏழாம் ஆறாம் நூற்றாண்டுகளில் கதிர்காமப் பகுதியில் (திசமாறகம உள்ளிட்ட) வாழ்ந்து வந்த திராவிடரிடையே நிலவி வந்த வேல் வணக்கம் என்ற உருவ வழிபாடே பிற்காலத்தில் கதிர்காமத்தில் முருக வழிபாடாகவும் (முருகன் ஆலயம்) வேல்வழிபாடாகவும் (கதிரமலை) விளங்கி வந்தன.

பண்டைய வரலாற்றில் திராவிடர் என்பது தமிழரையே குறிப்பதாகும். ஈழத்தில் பெருங்கற்காலச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசங்களில் கதிர்காமம் உள்ளிட்ட திசமாறகம பிரதேசமும் அடங்கும். (ஈழத்து இந்து சமய வரலாறு—பக்:36 பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் -1996) கதிர்காமம், திசமாறகம ஆகியன பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களாகும்.

# தேகாரோக்கியம்

நம் உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். உதாரணமாகநாம் நன்றாக இருப்போம் திடீர் என்று நமக்குஉடல்நலக்கோளாறு ஏற்பட்டுவிடும். அந்தப்பிரச்சினையை சரிசெய்ய நம்மால் உடனே மருத்துவரை அணுகமுடியாது. இருந்தாலும் நமக்கு சில கைவைத்தியம்,பாட்டிவைத்தியம், சித்தவைத்தியம்,வீட்டுவைத்தியம், நாட்டு வைத்தியம் என்று நமக்க ஏதாவது தெரிந்திருந்தால் அந்த ஆரோக்கியப் பிரச்சினையை சரிசெய்து விடமுடியும். அந்தவகையில் உங்களுக்காக இந்தப்பகுதியில் நாம் வயிற்றுப்புண் வராமல் தடுக்க சாப்பிடவேண்டிய உணவுகளைபார்ப்போம்.




நாம் உட்கொள்ளும் உணவானது செரிப்பதற்காக இரைப்பையில் ஹைட்ரோகுளோரிக் அமிலம் மற்றும் பெப்சின் திரவம் போன்றவை சுரக்கிறது. இந்த அமிலங்கள் காலையில் அதிகமாகச் சுரக்கும். இந்நிலையில் நாம் காலை உணவைத்தவிர்ப்பதன் மூலம் அந்த அமிலங்கள் செரிமானம் அடைவதற்குத் தேவையான உணவு இல்லாததால் வயிற்றுப் பகுதிகளை அரிக்கத் தொடங்குகிறது. இக்காரணத்தினால்தான் வயிற்றில் அல்சர் ஏற்படுகிறது. எனவே வயிற்றுப் புண்களைப் போக்க என்ன உணவுகளைச் சாப்பிடவேண்டும் என்பதை இப்பதிவில் பார்க்கலாம்.

**நார்ச்சத்து நிறைந்த உணவுகள் :**



வயிற்றுப்புண் நீங்க அப்பிள், பேரிக்காய் மற்றும் ஓட்ஸ் போன்ற நார்ச்சத்து அதிகமுள்ளஉணவுகளை உட்கொள்ள வேண்டும். நார்ச்சத்து நிறைந்த உணவுகளை நாம் சாப்பிடும் போது வயிற்றில் உள்ள அமிலத்தின் அளவு குறைக்கிறது. அதுமட்டுமல்லாமல் வயிற்றில் உள்ளவீக்கம் மற்றும் வலியையும் குறைக்கிறது.

என்.சசிகரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
விவசாய அமைச்சு (கால்நடைப்பிரிவு)

- நிருபர்.P. வசந்த்- 76 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாவிதன்வெளியில் கிரிக்கட் சுற்றுப்போட்டி 76 வது சுதந்திர தின நிகழ்வினை கொண்டாடும் வகையில் நாவிதன்வெளி பிரதேசத்திற்கு உட்பட்ட செல்வா விளையாட்டுக் கழகத்தினால் மாபெரும் கிரிக்கட் சுற்றுப்போட்டி ஒன்றினை 04/02/2024ம் திகதி சவளக்கடை பொது விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்தன. இச்சுற்றுப் போட்டிக்கு இப் பிரதேசத்தில் உள்ள 8 பிரபல்யம் வாய்ந்த விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றி இருந்தன. இப்போட்டிக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம் முஷாறப் அவர்கள் கலந்து கொண்டார். சிறப்பு அதிதிகளாக நளின் பவுண்டேஸன் ஸ்தாபகர், வி.கே பவுண்டேஸன் ஸ்தாபகர் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் சவளக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சிறப்பு அதிதிகளாக நாவிதன்வெளி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர், இளைஞர் சேவை உத்தியோகத்தர் மற்றும் சவளக்கடை கிராம சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். இறுதிப்போட்டிக்கு உதயா விளையாட்டுக் கழகம் மற்றும் செந்தமிழ் விளையாட்டுக் கழகங்கள் தெரிவு செய்யப்பட்டன. இதில் உதயா விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. இறுதிப் போட்டியினுடைய ஆட்ட நாயகனாக உதயா விளையாட்டுக் கழகத்தினுடைய உறுப்பினர் ஜெ.றுக்ஷன் அவர்களும் இச்சுற்றுத் தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினர் ர.அனுராஜ் அவர்களும். இச் சுற்றுத் தொடரின் தொடர் ஆட்டநாயகனாக உதயா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் பி.ரூபன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டார்.





# சமயலறைக் குறிப்புக்கள்

- முட்டையை தண்ணீரில் வேக வைக்கும் போது சிறிது சமையல் எண்ணெயை சேர்க்கவும். அவ்வாறு செய்தால் முட்டை ஓடு கீறி முட்டையின் சதைப்பகுதி வெளியே வராது.
- குழம்பில் உப்பு அதிகமாகி விட்டால் உருளைக் கிழங்கினை இரண்டு மூன்று துண்டுகளாக்கி குழம்பு கொதிக்கும் போது அல்லது சூடாக இருக்கும் போது சேர்க்கவும். பரிமாறும் போது உருளைக் கிழங்கு துண்டுகளை வெளியே எடுத்து விடவும். குழம்பு சுவையாக இருக்கும்.
- ரசம் செய்வதற்கு புளியை ஊறவைக்க மறந்து விட்டால் தண்ணீரைக் கொதிக்கவைத்து புளியை ஊற வைத்தால் புளிஎளிதில் ஊறிவிடும்.
- அரிசி, பருப்பு டப்பாக்களில் வேப்பிலை/பிரிஞ்சி இலைகளை போட்டு வைத்தால் பூச்சிகள் வராது.
- வெள்ளைப்பூண்டை உரிக்கும் முன்பு சிறிது நேரம் தண்ணீரில் ஊறவைத்துவிட்டு பின்பு உரித்தால் தோல் எளிதாக உரியும்.
- வெங்காயத்தை 10 நிமிடங்கள் தண்ணீரில் போட்டு, பின்பு அதை எடுத்து உரித்தால் கண்ணில் கண்ணீர் வராது.
- எலுமிச்சம் பழத்தைவெந்நீரில் சிறிதுநேரம் ஊறவைத்து பிறகு சாறு பிழிந்தால் அதிகப்படியான சாறு கிடைக்கும்

## சில அழகுக் குறிப்புகள்

- கற்றாளையின் ஜெல்லை முகத்திற்கு தடவி மசாஜ், செய்து காய வைத்து கழுவினால் முகத்தில் உள்ள அழுக்குகள் அனைத்தும் நீங்கி, முகம் பளிச்சென்று புத்துணர்ச்சியுடன் காணப்படும்.
- அறுகம்புல்லுடன் சிறிது மஞ்சள் சேர்த்து அரைத்து உடலில் பூசிக்குளித்தால் வேர்க்குரு நீங்கி உடல் பளபளப்பு அடையும்.
- முகத்தில் உள்ள தளும்புகள் மறைவதற்கு தக்காளி மற்றும் தயிர் இரண்டையும் கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்து 15 முதல் 20 நிமிடங்கள் கழிந்து கழுவ சருமத்தில் உள்ள தழும்புகள் மறைந்து சருமம் பிரகாசமாக மிளிரும்.
- வேப்பமரப் பட்டையை பொடியாக்கி தேங்காய் எண்ணெயில் கலந்து தடவி வந்தால் இளநரை மாறும்.
- தினமும் அரிசி களைந்த நீரில் முகம் கழுவினால் சருமத்தில் உள்ள அழுக்குகளை மட்டும் நீக்காமல் உள்ளிருக்கும் அதிக எண்ணெய் மற்றும் கரும்புள்ளிகளை அகற்றும்.



## குலாப் ஜாமுன்

**தேவையான பொருட்கள்**

01. சீனி – ½ Kg
02. குலாப் ஜாமுன் – 01 Packet
03. தேங்காய் எண்ணெய் – தேவையான அளவு

### செய்முறை :

சீனி ½ Kg அளவில் எடுத்து 1கப் நீர் ஊற்றி பாகு போல் தயார் செய்து ஒரு பாத்திரத்தினுள் ஊற்றி வைத்தல், பின்பு குலாப் ஜாமுன் மாவை சிறிது நீர் ஊற்றிப் பிசைந்து 10 நிமிடம் வைத்தல். பின்பு சிறிய உருண்டையாகப் பிடித்து 5 நிமிடம் வைத்து பின்பு எண்ணெயில் குலாப் ஜாமுன் உருண்டையை போட்டு பொன்னிறமாகும் வரைபொரித்து எடுத்தல். பொரித்த உருண்டையினைச் சீனிப்பாகினில் 2 மணித்தியாலம் இட்டு பின்னர் பரிமாறலாம்.

----- சு.நிசாந்தினி (சமூக சேவைப்பிரிவு) -----

# பெண்ணாய் வாழ்வோம். பெண்ணியம் காப்போம்.



வெவ்வேறு துறைகளில் இரண்டு முறை நோபல் பரிசினைவென்ற சாதனைப் பெண் மேரிகியூரி அம்மையார் பற்றிய பெண்மையைப் போ-ற்றுவோம் பகுதியில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்படாத காலகட்டத்தில் அறிவியலில் பெண்கள் சாதிக்க முடியும் என எடுத்துக் காட்டிய மேதையே மேரிகியூரி அம்மையார் ஆவார்.

சமமான வாய்ப்பு வழங்கப்பட்டால் ஆண்களுக்கு சமமாக நாங்களும் சாதிப்போம். ஆண்களைவிட அதிகமாக நாங்களும் சாதிக்க முடியும் என தன்னம்பிக்கையை புகுத்திய பெண் மேரிகியூரி அம்மையார்.

1867ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ஆந் திகதி போலந்து நாட்டின் வர்ஷா என்ற நகரத்தின் ஏழைக் குடும்பத்தில் பிறந்த இவர், மரியா ஸ்கெ-ாடஸ்ஹா கியூரி என்ற இயற்பெயரைப் பெற்ற-ிருந்தார். தந்தையார் ஓர் அறிவியலாசிரியர் ஆவார். சிறுவயதிலிருந்தே கல்வியில் சிறந்து விளங்கிய அவர் தனது தந்தையிடமே ஆரம்பக் கல்வியைக் கற்றார். எனவே, இக் காலப்பகுதியில் பெண்கள் கல்வி கற்பதற்காக வெளியிடங்களுக்குச் செல்ல முடியாது. ஆனால் மேரிகியூரி அம்மையாரோ சிறுவயதிலேயே நான் விஞ்ஞானியாக வருவேன் எனக் கனவு கண்டார். இக்காலப்பகுதியில் தான் கற்றவற்றை அருகிலுள்ளளோருக்கு கற்பித்துக் கொண்டு அதிலிருந்து பெறப்பட்ட சிறுதொகையை தனது ஆராய்ச்சி நடவடிக்கைக்காகவும், பயன்படுத்தின-ார். தனது 24ஆவது வயதில் பாரிஸ் நகரத்திற்கு இடம் பெயர்ந்த இவர் பாரிஸ் பல்கலைக்கழகத்-

யுரேனியம் பற்றிய ஆய்வில் கணவனோடு இணைந்து ஈடுபட்ட இவர் 2 புதிய கண்டுபிடிப்புக்களை உலகிற்கு வழங்கினார். இரண்டு புதிய கதிர்வீச்சு மூலகங்களைக் கண்டுபிடித்தார். முதலாவது மூலகத்திற்கு தனது நாட்டின் பெயரைக் கொண்டு பொலோனியம் என்ற பெயரைச் சூட்டினார். அதன் பின்பு றேடியத்தைக் கண்டுபிடித்தார். றேடியத்திற்கு காப்புரிமை கோரினால் அதிக வருமானத்தினைப் பெற்று சிறந்த விஞ்ஞான ஆய்வுகூடத்தை நிறுவும்படி இவர்களது சக விஞ்ஞானிகள் வலியுறுத்திய போதிலும் இத் தம்பதிகள் ஏற்றுக் கொள்ள வில்லை. ஏனெனில் எதிர்காலத்தில் இது தொடர்பான ஆய்வுகளில் அதிகமான மக்கள் ஈடுபடவேண்டும் எனவும் இதன் மூலம் புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்கும் மருத்துவமுறை விருத்தியடைய வேண்டும் எனக் கூறினார். இக்காலப்பகுதியில் இத் தம்பதிகளின் விஞ்ஞான ஆய்வுகூடம் மழைகாலங்களில் ஒழுகிய நிலையியலும், வெப்பநிலை 6 பாகை செல்சியசிற்கும் குறைவான நிலையில் ஆய்வு செய்ய முடியாத நிலையிலுமே காணப்பட்டது.

1903ஆம் ஆண்டு றேடியக் கண்டுபிடிப்பின் இயற்பியலுக்கான நோபல் பரிசு இத் தம்பதிகளுக்கு கிடைத்த போதிலும் 1906ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்தில் கணவனை இழந்தார். தனது கணவர் வகித்த பாரீஸ் பல்கலைக்-கழக பேராசிரியர் பதவி இவருக்கே கிடைக்கப் பெற்றது. இப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பெண் பேராசிரியர் இவரே ஆவார். 1911ஆம் ஆண்டு றேடியத்தின் அணு இடையைக் கணித்தலைக் கண்டுபிடித்தமைக்கான வேதியல் நோபல் பரிசினைப் பெற்றுக் கொண்டார்.

முதலாம் உலகமகாயுத்தத்தின் போது இராணுவத்துறையின் கதிரியக்க மருத்துவ மையம் நிறுவியதோடு உடற்கட்டிகளைக் குணப்படுத்துவதற்காக இவரது றேடியம் மற்றும் புலோனியக் கண்டுபிடிப்பு இன்று வரை புற்றுநோய்க் குணப்படுத்தலுக்கு பயன்படுத்தப்படுகிறது. கதிர்வீச்சு ஆய்விற்கே தனது வாழ்க்கையை அர்ப்பணித்த மேரிகியூரி அம்மையார் 1934இல் கதிர்வீச்சுத் தாக்க விளைவாலேயே இறைபதமடைந்தார். இவரது வாழ்க்கையினூடாக பின்வரும் படிப்பினைகளைக் கண்டுகொள்ளக் கூடியதாகவுள்ளது.

01. பிற்போக்கான சமூக சிந்தனைகளை உதறித்தள்ளும் மனப்பாங்கு
02. வறுமையிலும் மானுட நலன் நாடும் தன்மை
03. இன்னல்களைத் தவிடுபொடியாக்கும் கடினஉழைப்பு
04. சுயநலம் துறந்து பொதுநலன் நாடும் பண்பு.

இந்த நான்கில் ஒன்று இருந்தாலே இன்றைய மானிடர்களின் வாழ்வு சிறப்பாகக் காணப்படும் என்பதில் ஐயமில்லை.

திருமதி.T.கிருபைராஜா
பிரதி திட்டமிடல் பணிப்பாளர்
பிரதேச செயலகம், நாவிதன்வெளி.

## அலோபதி மருந்துடன் (ஆங்கில) ஆயர்வேத மருந்து உட்கொள்ளலாமா மருத்துவர் சொல்வது என்ன?

ஆயர்வேதம்……. ஆயுளைக் காக்கும், வளர்க்கும் என்ற செய்தி தொடர்ச்சியாக சோசியல் மீடியாக்களில் பரப்பப்படுகின்றன. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஆயர்வேத மருத்துவத்தைப்பற்றி அறியவும் அதில் சிகிச்சை எடுக்கவும் பலரும் ஆர்வமாக இருக்கின்றனர். அதே நேரத்தில் ஆயர்வேதம் குறித்து பல தவறான புரிதலும் அதிகரித்துள்ளது. குறிப்பாக ஆயர்வேத மருந்துகள் உட்கொண்டால் பக்க விளைவுகள் ஏற்படாது, ஆயர்வேத மருந்துகளில் உலோகங்ங்ள் கலக்கப்படுகின்றன, ஆயர்வேத மருந்து சாப்பிட்டால் உடல் சூடாகும் என்பது போன்ற பட்டியல்கள் நீள்கின்றன. இவ் விடயம் குறித்து ஆயர்வேத மருத்துவர் (இந்திய) சாந்தி விஜயபால் அவர்களின் கருத்தானது, ஆங்கில மருத்துவத்தில் அண்டிபயட்டிக் மருந்து எடுத்துக்கொண்டால் அது அசிடிட்டியை ஏற்படுத்தலாம். எனவே அண்டிபயட்டிக் மருந்து கொடுக்கும்போதே இரைப்பையில் அழற்சி மற்றும் புண் ஏற்படாமல் இருக்க பேன்டபிரசோல் (PANTAPRAZOLE) மாத்திரையும் சேர்த்துக் கொடுப்பார்கள்.

ஆனால் ஆயர்வேத மருந்து எடுத்துக்கொண்டால் அது இன்னுமோர் பிரச்சினையை ஏற்படுத்தாது. பொதுவாக (Herbal Origin) கெர்பல் ஓர்ஜின் என்பதால் அதில் பக்க விளைவுகள் இருக்காது ஆனால் சில நேரங்களில் பக்க விளைவுகள் ஏற்படலாம். அதாவது அவர்வர் உடல்நிலையறிந்து கொடுக்காமல் விட்டாலோ டோஸ் அதிகமாகக் கொடுத்தாலோ பக்க விளைவு ஏற்படலாம். ஆங்கில மருந்துகளுடன் சேர்த்துச் சாப்பிட்டாலும் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.

கை ரேகைகள் வேறுபடுவது போல் ஒவ்வொருவரது உடலின் தன்மையும் வேறுபடும். பித்தம் மற்றும் கப உடல்வாகு இருப்பவர்களுக்கு அரிப்பு வரலாம். அவர்கள் இருவருக்கும் ஒரே மாதிரியான மருந்துகள் கொடுத்தால் அது பயன் தராது. அத்தகைய சூழலில் பித்த உடல்வாகு இருப்பவர்களுக்கு பித்தத்தைக்குறைக்கும் மருந்துகளைக் கொடுத்தால் மட்டுமே அவர்களுக்கு அரிப்பு குறையும். மாற்றிக் கொடுத்தால் பிரச்சினை குறையாததுடன் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. எனவே ஆயர்வேத மருந்தாக இருந்தாலும் அதை சரியான முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆயர்வேத மருத்துவத்தில் வலி நிவாரணி மாத்திரைகள் கிடையாது அதற்குப்பதிலாக தசைகளை தளர்வாக்க (Muscles relaxant), குக்குலு (Guggulu) மாத்திரைகள் கொடுக்கப்படும் ஆனால் அந்த மாத்திரைகள் கொடுக்கும்போது அளவு அதிகமாக இருந்தால் பக்கவிளைவுகள் ஏற்படலாம். மூட்டுவலிக்குக் கொடுக்கப்படும் ராஸ்னா ஏரண்ட் கசாயத்தில் ஆமணக்கு அதிகமாக எடுத்துக் கொள்ளும்போது பேதி உண்டாகும். அளவு சரியாகக் கொடுக்கப்படாததே அதற்குக் காரணமாகும். நோய் குணமாக வேண்டும் என்பதற்காக மருந்துகள் சாப்பிடும்போது சில நேரங்களில் மருந்துகள் ஒவ்வாமையால் பக்கவிளைவுகள் ஏற்படலாம். இது பலருக்குத் தெரிவதில்லை. பொதுவாக 50 வயதைக் கடந்தாலே உடல் சார்ந்த பிரச்சினைகள் வரத் தொடங்கிவிடும். இதயம் சார்ந்த பிரச்சினைகளால் பலர் அவதிப்படுவார்கள். அவர்கள் ஏதாவது ஓர் அலோபதி மருந்தை எடுத்துக்கொண்டிருப்பார்கள். குறிப்பாக இரத்தத்தை உறைய விடாமல் தடுக்கும் மருந்துகளைச் சாப்பிடும்போது அதற்கு எதிரான மருந்துகளைச் சாப்பிடாமல் இருப்பது நல்லது. உதாரணமாக அருகம்புல் ஜூஸ் குடிப்பவர்கள் கவனத்திற்கு, அருகம்புல்லுக்கு இரத்தத்தை உறைய வைக்கும் குணமுண்டு ஏற்கனவே அவர்கள் இதயநோய்க்காக சாப்பிடும் அலோபதி மருந்துடன் அருகம்புல் சேரும்போது வேதியியல் மாற்றமடைந்து அவர்களுக்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். சில நேரங்களில் உயிருக்கு ஆபத்தையும் ஏற்படுத்தலாம் எனவே மாத்திரை மருந்துகள் சாப்பிடுபவர்கள் எச்சரிக்கையுடன் இருத்தல் நன்று.

அடுத்து இரத்தம் உறைவதைத் தடுக்கக்கூடியது இஞ்சியாகும். இஞ்சி ரீ, இஞ்சி துவையல் சாப்பிடுபவர்கள் இதய நோய்க்காக எடுத்துக்கொள்ளும் அலோபதி மருந்துகளுடன் சேரும்போது பிரச்சினைகளை உருவாக்கலாம், பக்கவிளைவுகள் ஏற்படலாம்.

இதனைத் தடுப்பதாயின் இவைகள் பற்றி ஆயர்வேத மருத்துவரிடம் ஆலோசனை பெற்ற பின்னரே மருந்துகளை உட்கொள்ளுதல் அவசியமாகும்.

நன்றி (விகடன்)

தேடல் தொகுத்து அனுப்பியவர் : கி.யோகலிங்கம்

# பிரசவம்

தாய்மையின் மகத்துவத்தை நான்
தாயானபோது உணர்ந்து கொண்டேன்.
இந்த பெண்மையின் பெருமிதத்தை - நான்
பெற்றெடுத்த போது புரிந்து கொண்டேன்...
பிறப்பு முதல் பெண்ணியம் காத்து நின்றவள்
தான் பெற்றெடுக்கும் போது.

அத்தனையும் மறந்துபோகிறாள்...
ஆடை விலகுவதை ஆபாசமாய் பார்க்கும்
கண்களே...! அவள்
ஒருமகவை ஈன்றெடுக்கும் போது
அருகிலிருந்து பாருமையா...
ஆபாசம் உம் கண்களுக்கு
அபத்தமாய் தெரியுமையா...
தன் ஆடை களைந்து...
தன் மானம் மறந்து...
உடம்பால் வலிசுமந்து...
உள்ளத்தால் தன் உணர்வுகளை
உயிர் துடிதுடிக்க வைத்திருப்பாள்...
உடல் துடிதுடிக்க அதில் அவள்
உயிரும் பதபதைக்க...
தன் உறுப்பு கிழித்து மறுஜென்மமாய்
பிறப்பெடுத்து உனைப்பெற்றெடுத்திருப்பாள்...
பெண்மை உணர்ந்தவளாய்
பெருமை கொள்கிறேன் - எப்
பிறப்பும் பெண்ணாய் பிறப்பதற்கு...

*******

தீபா சிவராசா
அபிவிருத்தி உத்தியோகத்தர் (Veterenary Office, Navithanveli)

துன்புற்ற எங்களை மீட்டெடுக்க - சிலர் துடிப்புற்று
எழுந்தனர் போர் தொடுக்க அன்பற்ற அற்பர்கள்
பிரிவினையை - நம்மில் அள்ளி இறைத்தனர் வேர் பிடிக்க

கணப்பட்டுப் போனதோரும் தேசம் - கொடுங்
கயவர்கள் செய்தசூழ்ச்சியிலே மண் பட்டபாடுகள் என்
சொல்வேன் - பல
மக்கள் நிறைந்திட்ட தேசத்திலே

கோடாரிக் காம்பாக நின்ற சிலர் - இங்கு
கொட்டம் அடித்தனர் எட்டப்பராய் நாடித்துடிப்புகள்
அடங்கவில்லை - எங்கள் நாட்டின் பெருமைகள்
முடங்கவில்லை

மூத்தபரம்பரை காட்டித் தந்த - மண்
முத்துக் குளித்திடும் விவசாயம்
பூத்துக் குலுங்கிட்ட வேளையிலே - மண்ணில்
புதைத்தனரே அந்த நாளையிலே

இந்நிலை கண்ட தலைமைகளோ - இதை
எதிர்த்துப் போர்க்கொடி தூக்கிநின்றார்
முன்னிலே ஆயுதம் முனையிருந்தும் - மண்ணில்
மூட்டிய தீயினை மாற்ற வந்தார்

பிரித்து ஆண்டிடும் கொள்கையிலே - உட்
பிணக்கை வளர்த்தார் மக்களிலே தரித்த
எங்களின் தாய்க் குலத்தில் - நரித் தந்திரத்தால்
பகை மூட்டிவைத்தார்

மூட்டியதீ பகை மக்களிலே - தினம்
மூண்டு எழுந்தது முரண்பாடாய் காட்டிக் கொடுத்திடும்
கூட்டமொன்று — அங்கு
கைப்பொம்மை ஆகின உடன்பாடாய்

தீவினில் பற்றிய தீப்பொறியை - தாய்த்
தேசப்பற்றுள்ளோர் கண்டுகொண்டார்
பூவினில் தீப்பொறி பரவாமல் - நற்
பொன் மனம் மிக்கவர் திரண்டெழுந்தார்

சுனாமி தந்த பாடத்திலே — மத சாதி
வேதம் காட்டியதா?
அனாதரவாய் மாற்றியதே - உங்கள்
ஆழ்மனக் கதவு பூட்டியதா?
கொரோனா என்ற நுண்கிருமி -
“சிறுகுழந்தை பாவம் என்றதுவா”?
வராமல் தீவைத் தான் மறந்து - எங்கும் வதைக்க
மறந்துசென்றதுவா?

மனிதம் என்னும் பொற் கயிற்றை - உயர்
மாண்புகொண்டு நாம் பிடிப்போம் புனிதம் பெறவே
எம் தேசம் - நல்ல
பூட்கை கொண்டே நாம் இருப்போம்.

எம்.ஐ.அலியார்
சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்

# ஒற்றுமைக்காய் உழைப்போம்

தாய்த்திருநாடு பொன்னிலங்கை - பகை தாண்டி
உடைத்தது கைவிலங்கை
வாய்த்த சுதந்திரநற் காற்றை - உடன்
வாங்கி உயர்த்திடுவோம் நாட்டை

எத்தனை பூக்கள் பூத்திருக்கு - எங்கள் ஏக்கம்
தவிர்த்திடும் தேசத்திலே
அத்தனை அழகு காத்திருக்கு — விழி ஆனந்தம்
கொள்ளுமா? நேசத்திலே!

எழுபத்து ஆறு ஆண்டுவரை - அன்னை
ஐக்கிய இராச்சிய வெள்ளையரால் - அன்று அமைத்த
சாசனவரைபுகளால் சிக்கித் தவித்தோம்
அடிமைகளாய் - இருள் சிறைப்பட்டு வாழ்ந்தோம்
கொடுமைகளால்

ஏ.எல்.எம். ஷினாஸ், க.நீலநேந்திரன்

# நாவிதன்வெளியின் இளம் பண்டிதர் பட்டத்தைப் பெற்ற குலசிங்கம் சுபாஸ்கர்




மட்டக்களப்பு சைவத் தமிழ் மன்றம் அகில இலங்கை சைவ பண்டிதர் சபையினால் 2023ம் ஆண்டு நடைபெற்ற சைவ பண்டிதர் இளம் சைவ பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்ற இளம் சைவ பண்டிதர்களுக்கான 4வது பட்டமளிப்பு விழா மட்டக்களப்பு தமிழ் சங்க மண்டபத்தில் இம்மாதம் 3ம் திகதி சனிக்கிழமை மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை நாவிதன்வெளி பிரதேசத்தை சேர்ந்த குலசிங்கம் சுபாஷ்கர் அவர்கள் இளம் சைவ பண்டிதர் பட்டத்தினை பெற்றுக்கொண்டார். இவர் இந்து சமய மதகுருவா-கவும் நாவிதன்வெளி பிரதேசத்தில் அமைந்துள்ள 15ம் கிராமம் திருவானூர் சிறி முருகன் ஆலயம், மத்திய முகாம் சிறீ முருகன் ஆலயம், நாவலடி பிள்ளையார் ஆலயம், ஆலையடி பிள்ளையார் ஆலயம், 4ம் கிராமம் சிறிமுருகன் ஆலயம் போன்ற பல ஆலயங்களின் பிரதம குருவாகவும் 7ம் கிராமம் சிறி சித்தி விநாயகர் அறநெறி பாடசாலை ஆசிரியராகவும்,

7ம் கிராமம் அன்புவெளி கிராம அபிவிருத்திச் சங்க தலைவராகவும்,

7ம் கிராமம் அன்புவெளி வலம்புரி , இளைஞர் கழக தலைவராகவும் மேலும் பல ஆலயங்கள் அமைப்புக்களின் ஆலோசகராகவும்

கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றியத்தின் உறுப்பினராகவும்

கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் ஒன்றியத்தின் உறுப்பினராகவும்

அபிவிருத்திக்கான சமூக முயற்சியாளர்கள் வலையமைப்பு (SPAND) அமைப்பின் இந்து சமய மதகுருவாகவும் ஆலோசகரா-கவும் சிறந்த ஓர் ஆன்மீக சொற்பொழிவாளராகவும் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலகம் ஊடாக சிறந்த சமூக சேவகருக்கான விருதினை வென்ற ஓர் சிறந்த சமூக சேவகரும் மதிக்கத்தக்க மதகுருவாகவும் விளங்கும் இளம் சைவ பண்டிதர் சிவ சிறி சுபாஷ்கர் சிவம் ஐயா அவர்கள் இந்த வருடத்திற்கான சைவ பண்டிதர் இளம் சைவ பண்டிதர் பரீட்சைய-ில் சித்தி பெற்ற ஒரே ஒரு மதகுரு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படியான ஒரு மதகுரு ஆன்மீக சமய சமூக வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்படும் ஒருவர் நாவிதன்வெளி பிரதேசத்தில் 7ம் கிராமம் அன்புவெளி எனும் கிராமத்தில் குலசிங்கம் புஷ்பலதா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்து இப்படியான பல சேவைகளையும் பாராட்டுக்களையும் பட்டங்களையும் பெறுவது இவரது பெற்றோருக்கும் இவரை வளர்த்து ஆளாக்கிய ஆசிரியர்களுக்கு இவர் பிறந்த ஊருக்கும் பெருமை சேர்க்கும் ஓர் விடயமாகும்.

இவருக்கு நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் நாவெளி மின்னிதழ் பெருமிதம் அடைவதோடு. இ,ன்றைய இளைஞர்கள் எதிர்காலத்தில் ,வரை போன்று சமூகத்தையும் சமயத்தையும் சைவத் தமிழையும் கட்டிக்காக்க முன்வர வேண்டும் எனவும் எதிர்பார்க்கின்றோம்...